செ.வெ.எண்.349 நாள்.02.10.2016

**காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கீழம்பி திருமலை தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்ற வாக்குசாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.இரா.கஜலட்சுமி இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

---

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கீழம்பி திருமலை தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்ற உள்ளாட்சி மன்ற தேர்தல் வாக்குசாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பினை பார்வையிட்டு ஆய்வுமேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.இரா.கஜலட்சுமி இ.ஆ.ப., அவர்கள் வாக்குச் சாவடியில் பணிபுரிய உள்ள அலுவலர்கள் முதலில் வாக்குசாவடி அமைந்துள்ள இடத்தினை தெரிந்துகொண்டு வாக்குப்பதிவிற்கு முந்தைய நாளே அவர்கள் தம் வாக்குச்சாவடிக்களுக்கு சென்று விட வேண்டும். வாக்கு பதிவு பொருட்கள் அனைத்தும் பெறப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

மேலும், வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், இதர வாக்குப்பதிவு அலுவலர்களும் ஒரு குழுவாக செயல்பட வேண்டும். வாக்காளர் பட்டியலை சரிபார்த்து வைக்க வேண்டும். வாக்குப்பதிவிற்கு முன்பு வாக்கு பெட்டிகளை வாக்குச்சாவடி முகவர்களிடம் திறந்து காண்பித்து பின்னர் அதனை முறையாக மூடி சீல் வைக்க வேண்டும். தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஆவணங்கள் ஏதேனும் ஒன்றினை பெற்று வாக்காளர் அடையாளத்தினை உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார். வாக்குப்பதிவின்போது வாக்காளர்களை வரிசைப்படுத்தவும், வேட்பாளர்களின் முகவர்கள் உரிய நேரத்தில் வாக்குச்சாவடிக்கு வந்து உள்ளனரா என்பதையும் உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயிற்சிக்கு வந்திருந்த வாக்குச்சாவடி அலுவலர்களிடம், ஒரு வாக்காளருக்கு எத்தனை பதவிகளுக்கு வாக்குச்சீட்டுகள் வழங்கப்பட வேண்டும் என்பதையும், எந்தெந்த பதவிகளுக்கு எந்ததெந்த வண்ணத்தில் வாக்குச்சீட்டுகள் வழங்கப்படவுள்ளது என்பதையும் கேட்டறிந்தார். வாக்குப்பதிவு நாளின் போது இரண்டு மணிநேரத்திற்கு ஒருமுறை வாக்குப்பதிவு நிலவரத்தை வாக்குச்சாவடி தலைமை அலுவலர், சம்மந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மண்டல அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும் என கூறினார்.

இவ்வாய்வின்போது, ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.



காஞ்சிபுரம் ஒன்றியம், கீழம்பியில், உள்ளாட்சி தேர்தல்  வாக்குசாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.இரா.கஜலட்சுமி இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டார். உடன் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை. ஜெயக்குமார் உள்ளார்.